AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD

## பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

" ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர். "

1 யோவான் 4:4

செய்தி மலர்
2025
பிப்ரவரி

இதழ் : 23
மலர் : 21



## சபை ஊழியரின் அன்பு மடல்



# உங்களுக்குள் இருக்கிறவர் பெரியவர்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த ஜனவரி மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் பிப்ரவரி மாதத்திலும் நம்மை கிருபையாய் வழி நடத்துவாராக. புதிய வருடம் பிறந்து அதற்குள் ஒரு மாதம் முடிந்து விட்டது. காலம் வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. தானியேல் சொல்கிறார் அவர் காலங்களைம் சமயங்களையும் மாற்றுகிறவர். ஆம் காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. அவர் அதனதின் காலத்திலே எல்லாவற்றையும் நேர்த்தியாய் செய்கிறார் (தானி–2:21).

இந்த மாதம் கர்த்தர் கொடுக்கும் வார்த்தை, "உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்" (1–யோவா–4:4)

ஆம் தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1–யோவா–5:4).

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூறாதிருங்கள். ஏனெனில் மாம்சத்தின் இச்சையும் கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்தில் உள்ளவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ? என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

காரணம் நாம் இந்த உலகத்தின் அதிபதியாகிய பிசாசான பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறோம் (1-யோவா-2: 13-17).
இனி யாரிடத்தில் எல்லாம் கர்த்தர் மேற்சொன்ன வார்த்தையை சொல்லி தேற்றினார் என்பதை கீழ் வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. மோசே...

மோசேயைக் கர்த்தர் பெயர் சொல்லி அழைத்து இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்து கானான் தேசத்திற்கு அழைத்து செல்ல அவன் தயக்கம் காட்டினான். இந்த பார்வோன் அரசன் பிசாசை உருவகப்படுத்துபவன். உலகப்பிரகாரமான செல்வங்களையும் அதிகாரங்களையும் உடையவன். அதனால் மோசே மிகவும் கலங்கினான். கர்த்தரைப் பார்த்து மோசே சொன்னான் "ஆண்டவரே இதற்கு முன்னாவது தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்கு பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல. நான் திக்குவாயும், மந்த நாவும் உள்ளவன். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நானனல்லவா? ஆதலால் நீ போ நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதை உனக்கு போதிப்பேன் என்றார். (யாத்-4:10-16) இப்படி அவனை தேற்றி மகிமையான விடுதலைப்பயணத்தை ஆரம்பிக்க வைத்தார். பிசாசான பார்வோனை பத்து வாதைகளால் வாதிக்க செய்து, பார்வோனை மேற்கொண்டான். வல்லமையான ஓங்கிய புயத்தோடும், வல்லமையோடும் இஸ்ரவேல் ஜனங்களை புறப்பட செய்தான் அல்லேலூயா.

இந்த உலகத்தின் சக்தியாகிய பார்வோனை அவனுக்குள் இருந்த தேவ வல்லமையினால் மேற்கொண்டான். ஆம் பிரியமானவர்களே, இந்த உலகத்தில் இருக்கும் பிசாசை விட நமக்குள் வாழும் நம் தேவன் பெரியவர். மோசேயோடு இருந்து ஜெயத்தை சுதந்தரிக்க செய்த கர்த்தர் நம்மோடும் இருந்து ஜெயத்தை சுதந்தரிக்க செய்வார்.

## 2. கிதியோன்...

மீதியானியரின் இராணுவம் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக பாளயமிறங்கி நிலத்தின் விளைச்சலை கெடுத்து இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும் ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதே போவார்கள். அவர்களுடைய ஒட்டகங்கள் எண்ணி முடியாததாயிருந்தது. இந்தப்பிரகாரமாக இஸ்ரவேல் தேசத்தை கெடுத்துப் போட்டார்கள். இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர்

 கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். அப்பொழுது கர்த்தர் கிதியோன் என்ற ஒரு மனிதனை எழுப்பினார். அவனோ மீதியானருக்கு பயந்து தன்னுடைய கோதுமையை தப்பிவிக்கிறதற்காக ஆலைக்கு சமீபமாக அதை போரடித்துகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தேவதூதன் தரிசனமாகி பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றான்.

அப்பொழுது கிதியோன் மீதியானியருக்கு மிகவும் பயந்தவனாக ஆ... என் ஆண்டவனே கர்த்தர் எங்களோடே இருந்தால் இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன். கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டு வரவில்லையா? அவருடைய அற்புதங்கள் எல்லாம் எங்கே? ஐயோ கர்த்தர் எங்களை கைவிட்டு விட்டாரே என்று புலம்பினான். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து உனக்கிருக்கிற இந்த பலத்தோடே போ. இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய். உன்னை அனுப்புகிறவர் நானல்லவா? நான் உன்னோடே கூட இருப்பேன். ஒரே மனுஷனை முறியடிப்பது போல நீ மீதியானியரை முறியடிப்பாய் என்றார் (நியா–6:1–16).

ஆம் பிரியமானவர்களே, உலகப்பிரகாரமான ஆள் பலம், அதிகார பலம், செல்வாக்குகள் எல்லாம் மீதியானியருக்கு இருந்தது. ஆனால் கிதியோனோடே தேவ பெலனிருந்தது. கிதியோன் வெறும் 300 பேரைக் கூட்டிக்கொண்டு போய் 3 படைகளாக பிரித்து ஒவ்வொருவரிடத்திலும் ஒரு எக்காளம், ஒரு பானை, ஒரு தீவட்டி ஆகியவைகளை கொடுத்து எக்காளங்களை ஊதி கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று உரக்கச் சத்தமாய் ஆர்ப்பரிக்க சொன்னான். இதைக்கேட்ட மீதியானியர் எல்லாரும் சிதறி கூக்கரலிட்டு ஓடிப்போனார்கள். கர்த்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்க பண்ணீனார், மீதியானியர் சர்வ சங்காரமடைந்தர்கள் (நியா–7:1–25).

ஆம் பிரியமானவர்களே, கிதியோனுடைய சேனை மிகவும் அற்பமாய் காணப்பட்டது. ஆனால் அவனோடு கண்ணுக்கு புலப்படாத தேவ சேனை இருந்தது. உலகத்தில் காணப்பட்ட மீதியானியரை விட கிதியோனிடத்தில் கண்ணுக்கப் புலப்படாத தேவ பலம் இருந்தது. கர்த்தர் அவனோடும் அவன் சேனையோடும் இருந்தார். அவனுடைய சேனை துதித்த போது கர்த்தர் வல்லமையாய் இறங்கி வந்தார். நாமும் கூட துதிக்கும்போது சாத்தான் மேல் ஜெயமெடுக்க முடியும். காரணம் உலகத்தில் இருக்கும் பிசாசை விட நமக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் தேவாதி தேவன் மிகவும் பெரியவர். அல்லேலூயா.

## 3. எலியா...

பாகாலின் தீர்க்கதரிசிகள் 450 பேரை கொன்று போட்டதினால் கடுங்கோபமடைந்த யெசேபெல் எப்படியும் எலியாவை கொன்று போட்டு விடவேண்டுமென்று பின்தொடர்ந்தாள். மனமுடைந்து போன எலியா வனாந்திரத்தில் ஒரு நாள் பிரயாணம் போய் ஒரு சூரைச் செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாக வேண்டுமென்று கோரி, போதும் கர்த்தாவே என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் நான் என் பிதாக்களை பார்க்கிலும் நல்லவனல்ல என்று சொல்லி நித்திரை பண்ண தொடங்கினான். அப்பொழுது ஒரு தூதன் அவனை தட்டியெழுப்பி எழுந்து போஜனம் பண்ணச் சொல்லி தழலில் சுடப்பட்ட அடையும் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் கொடுத்தான். அது மாத்திரமல்ல எலியாவைப்பார்த்து நீ "பண்ண வேண்டிய பிரயாணம் வெகுதூரமென்றான். எலியா அதே போல செய்து அந்தப் போஜனத்தின் பலத்தினால் 40 நாள் இரவு பகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதம் மட்டும் நடந்து போனான்" அவனுடைய வல்லமையான ஊழியங்கள் தொடர்ந்தது. அதன் பிறகு என்ன நடந்தது தெரியுமா? கொடுங்கோல் ஆட்சி செய்த யெசேபெல் படுகொலை செய்யப்பட்டாள். அவள் அழிந்தே போனாள்.

ஆம் பிரியமானவர்களே நீங்களும் கூட தேவனுக்காக வைராக்கியம் பாராட்டி ஆண்டவருக்காக அநேக ஊழியங்களை செய்து கொண்டிருக்கலாம். அதனால் பிசாசானவன் உங்களுக்கு தீங்கு செய்ய எத்தனிக்கலாம். ஆனால் கர்த்தரோ உங்களுக்கு தழலினால் சுடப்பட்ட அப்பங்களாகிய தேவ வசன வாக்குத்தத்தங்களையும், தண்ணீராகிய தேவ அபிஷேகத்தையும் கொடுத்து சோர்வுகளை நீக்கி ஊழியத்தை மேலும் வல்லமையாக செய்து தேவ மகிமைக்காக தொடர்ந்து வாழ நிச்சயமாக அருள் செய்வார்.

இதற்கெல்லாம் காரணம் ஒன்றே ஒன்றுதான். இந்த உலகத்தில் இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வெற்றியாக வாழ அருள் புரிவாராக.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# என்னை நோக்கி கூப்பிடு....

அன்பான சகோதர சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் யாவருக்கும் வாழ்த்துதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாம் எப்பொழுதும் ஆண்டவரை இயேசுவைக் கூப்பிட வேண்டும். மனுஷரை அல்ல எந்த சூழ்நிலையிலும் இயேசுவை அழைக்க வேண்டும். அவருக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பது நம் அனைவரின் உள்ளத்திலும் இருக்க வேண்டிய முக்கிய காரியம். எதற்காக எப்படி கூப்பிட வேண்டும் அப்படி கூப்பிடுவதினால் நமக்கு என்ன என்று பார்ப்பதை பார்க்கிலும் அவரை கூப்பிட்டால் என்னென்ன ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக்கொள்வோம் என்பதை சிந்தித்துப் பார்ப்போம்....

## 1. குணமாக்குகிறவர்...

சங்கீ-30:2- நாம் அவரை நோக்கி கூப்பிடும்போது நம்மை குணமாக்குகிற தெய்வம் நம் இயேசு. பிறவிக்குருடன் இயேசுவை நோக்கி மிக சத்தமாக தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். அப்பொழுது இயேசு நின்று அவனிடத்தில் சென்று நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறாய் என்று சொல்வதைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல அங்கு அவன் தன்னுடைய வாழ்க்கையில் பெரிய அற்புதமான அதிசயத்தை பெற்றுக்கொள்கிறான்.

பிறவியில் ஏற்பட்ட குறையை நிவர்த்தியாக்குகிறார் இயேசு. யாருக்கும் கிடைக்காத அற்புத சுகத்தை பெறுகிறான் அந்த பிறவிக்குருடன் என்பதை பார்க்கிறோம். அது போல யாரெல்லாம் தேவனை நோக்கி கூப்பிட்டார்களோ அவர்களுக்கு தேவன் அற்புதத்தை செய்கிறார் என்பதை வேதத்தில் வாசிக்கலாம். (யோசபாத், எசேக்கியா )

தாவீது தன்னுடைய சங்கீதத்தில் இந்த ஏழை கூப்பிட்டான் கர்த்தர் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். (சங்கீ-34:6)
நாம் தேவனை அழைக்கும் போது நமக்கு மறுஉத்தரவு கொடுக்கிற ஒரே தேவன் நாம் வணங்கும் கர்த்தரை தவிர வேறு யாருமில்லை. நாம் கூப்பிடும்போது மனுஷர்கள் தங்கள் வேளையில் கவனிக்காமல் இருக்கலாம். அப்படிக் கவனித்தாலும் உதவிகள் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய தேவன் அப்படிப்பட்டவர் இல்லை. நமக்கு பதில் தருகிறவராக இருக்கிறார். ஆமென்.

## 2. விடுதலை தருகிறவர்...

சங்கீ-118:5- நெருக்கத்திலே கூப்பிட்டேன் விசாலத்தில் வைத்தீர் என்று தாவீது சொல்கிறதை பார்க்கிறோம். அதுமட்டுமல்ல 1-சாமு-30:6-ல் தாவீது மிகவும் நெருக்கப்படும்போது கர்த்தருக்குள் தன்னை திடப்படுத்திக்கொண்டான் என்று பார்க்கிறோம்.
யோனா மீனின் வயிற்றிலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டான் அவனுக்கு விடுதலை கிடைத்தது. அவன் என்னை நோக்கி கூப்பிடுவான் நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச்செய்வேன், ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனை தப்புவித்து அவனை கனப்படுத்துவேன்.(சங்கீ-91:15)

புவுலும், சீலாவும் சிறையில் இருக்கும் போது அவரை போற்றி பாடி கூப்பிட்டார்கள் அப்பொழுது கர்த்தர் விடுதலை தந்தார் என்று பார்க்கிறோம். அது மட்டுமல்ல பவுல் மூலம் அங்கிருந்த சிறைச்சாலை ஊழியர்களும் மனந்திரும்பினார்கள் என்று பார்க்கிறோம். ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன். நீ என்னை மகிமை படுத்துவாய் (சங்கீ-50:15).

## 3. இரட்சிக்கிறவர்...

சகேயு இயேசு எப்படி பட்டவரோ என்று நினைத்து அவரைத் தேட மனதாயிருந்தான். அப்பொழுது இயேசு அவனைக் கண்டு அவனை அழைக்கிறார். ஆசையோடு இயேசுவுடன் செல்கிறான் அப்பொழுது அவனுக்கு இரட்சிப்பு இயேசுவின் மூலம் கிடைப்பதை பார்க்கிறோம். ஆபிரகாமின் குமாரன் என்ற அந்தஸ்தை பெறுகிறான். நாமும் அதுபோல அவரை தேடி அவரை அழைக்கும் போது நமக்கும் இரட்சிப்பு கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நானோ தேவனை நோக்கி கூப்பிடுவேன் கர்த்தர் என்னை இரட்சிப்பார்.(சங்கீ-55:16).

## 4. உதவிகள் செய்பவர்....

யாத்-14:10 இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். அப்பொழுது கர்த்தர் பெரிய அதிசயத்தை செய்தார். ஆசா ராஜா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். அவனுக்கு கர்த்தர் தன்னுடைய எதிரியை முறியடித்தார் என்பதை பார்க்கிறோம். எரேமி-33:3 என்னை நோக்கி கூப்பிடு அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன் என்று கர்த்தர் சொல்வதை பார்க்கலாம்.

எனக்கு அன்பான சகோதர சகோதரிகளே எப்பொழுதெல்லாம் நாம் ஆண்டவரை கூப்பிடுகிறோம், அவரை அழைக்கிறோமோ அப்பொழுதெல்லாம் நம் மேல் பிரியம் வைத்திருக்கும் நம் தேவன் நமக்கு பதில் தருகிறவராக இருக்கிறார். ஆமென்.

எப்பொழுதும் அவர் மேல் நம்பிக்கை வைத்து தேவனை நாம் அழைப்போமா?

கர்த்தர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரன்
S. சுகுமாரன்

## வெளிப்படுத்தின விஷேசம் ஒரு பார்வை

1. எழுதியவர் – அப்போஸ்தலனாகிய யோவான்
2. எழுதப்பட்ட காலம் கிபி 95
3. அதிகாரங்கள் 22 , வசனங்கள் 404

1. முன்னுரை (1:1 – 1:8)
2. இயேசு கிறிஸ்துவின் தன்மை (1:9, 20)
3. ஏழு சபைக்கான தூதுகள் (2:1– 3:22)
4. பரலோக சிங்காசனம் (4:1–4:11)
5. ஏழு முத்திரைகளால் முத்திரைக்கப்பட்ட புத்தம் (5:1 – 5:5)
6. அடிக்கப்பட்ட ஆட்டுகுட்டியானவர் (5:6 – 5:16)
7. ஏழு முத்திரை,ஏழு எக்காளம் (6:1 – 8:1) (8:2 – 11:19)
8. ஏழு கோபகலசங்கள் (15:1 – 16:21)
9. மகா பாபிலோன் (17:1 – 19:5)
10. ஆட்டுகுட்டியானவரின் கல்யாணம் (19:6, 10)
11. கிறிஸ்து திரும்பி வருதல் (19:11,21)
12. ஆயிர வருட அரசாட்சி (20:1,6)
13. சாத்தானின் முடிவு (20:7,10)
14. வெள்ளை சிங்காசனம் (20:11,15)
15. புதிய வானம்,புதிய பூமி (21:1 – 22:5)

# சர்வ வல்லமையுள்ள தேவன்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்த வானத்தையும் பூமியையும் அவற்றிலுள்ளவற்றையும் உற்று நோக்கினோமானால் உண்மையில் நாம் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. தேவன் எல்லாவற்றையும் நேர்த்தியாகவும் அருமையாகவும் நோக்கத்திற்காகவும் படைத்திருக்கிறார்.
"இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன்" ரோம-4:17.

காக்கைகுஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது அவைகளுக்கு இரையைச் சேகரித்துக் கொடுக்கிறவர் யார் (யோபு-38:41) நான் விசுவாசிக்கிறவர் இன்னார் என்று அறிந்திருக்கிறேன் என்று பவுல் சொல்கிறார், 2-தீமோ 1:12 நாமும் இந்த சர்வ வல்லமையுள்ள தேவனை அறிந்துகொள்ளலாம். இவர் நமக்கு உதவி செய்வதற்கு நம்முடைய சரீர பலமோ, பண பலமோ, ஆள் பலமோ, அரசாங்க உதவியோ, சட்டதிட்ட முறைமைகள் இவைகள் அவருக்கு தேவையில்லை. அவர் யெகோவா எல்லாவற்றுக்கும் மூல காரணமானவர். The source of the all source.

ஊற்றுகளின் ஊற்றானவர் அவர் சர்வ வல்லமையுள்ள தேவன்.

## 1. சரீர பலம் தேவையில்லை...

ஆதி-17:1 ஆபிராம் 99 வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகி நான் சர்வவல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. ஆதி-17:10 எனக்கும் உங்களுக்கும் உனக்கு பின்வரும் உன் சந்ததியாருக்கும் நடுவே உண்டாயிருக்கிறதும் நீங்கள் நடந்துகொள்ள வேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால் உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண் பிள்ளைகளுக்கும் விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும் என்று கர்த்தர் ஆபிராமிடம் பேசுகிறார். ஆபிரகாமுக்கு 99-வது வயதில் கர்த்தர் நான் உனக்கு சர்வ வல்லமையுள்ள தேவனாக இருப்பேன் நீ விருத்தசேதனம் பண்ண வேண்டும் உன் மாமிசத்தின் நுனித்தோல் அறுக்கப்பட்டு விருத்த சேதனம் பண்ணவேண்டும். ஆபிராம் தேவனிடம் இப்படியாக கேட்டிருக்கலாம் ஆண்டவரே 99-வயதாகிவிட்டது சரீரம் செத்தவனைப்போல இருக்கிறேன் பெலனே இல்லை இப்பொழுது பண்ணசொல்கிறீர்களே? இது எப்படி சாத்தியம் சரீரம் பலவீனப்பட்டு போய்விடும் இனி எப்படி குழந்தை பிறக்கும் என்று. கர்த்தர் சொல்கிறார் உனக்கு சரீரத்தில் பலன் இருந்தால்தான் குழந்தை கொடுக்கமுடியும் என்று நினைக்கிறாயா? நான் சர்வ வல்லமையுள்ள தேவன். சரீரத்தில் பலன் இல்லையென்றாலும் என்னால் குழந்தை கொடுக்கமுடியும். உன் சரீர பலன் எனக்கு தேவையில்லை. நம்மை ஆசீர்வதிப்பதற்கு சரீரத்தில் பலன் இருந்தால்தான் ஆசீர்வதிக்கமுடியும் என்பதில்லை. பலன் இருந்தாலும் இல்லையென்றாலும் அவரால் நம்மை ஆசீர்வதிக்கமுடியும். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன்.

தொடர்ச்சி 14-ம் பக்கத்தில்

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

செல்வி.ஜியோபி ஷம்மா
இயேசு ரத்தினம்
சகோ.வர்கீஸ்/ஜெஸ்லட்
சகோ.கண்ணன்
சகோதரி.ராணி ராமமூர்த்தி
சகோதரி. எலிசபத் ஈஸ்டர் ராஜ்
சகோ.எபினேசர்
செல்வி.யாழினி ஜெகன்நாதன்
செல்வி.மகிழினி ஜெகன்நாதன்
செல்வி ஷாரோன் கிரேஸ்
எபினேசர்
சகோ.வேலு ராமர்
சகோ.பிரவீன்
சகோதரி.கீதா சகாய மேரி
சகோதரி.நீலாவதி ஆசீர்வாதம்

சகோ.இம்மானுவேல் ஸ்டீபன்
செல்வி.கேரன் பெபிட் செல்பின்
சகோதரி.மெர்லின் ஜோன்ஸ்
சகோதரி.அதாலியா ஆசீர்வாதம்
சகோ. ராஜேஷ் இளங்கோ
சகோதரி.ஜாய்ஷகினா
சகோதரி.எப்சிபா பியூலா
சகோதரி.இவ்லின் சுனிதா
சகோதரி.ஜேரன் டேனியேல்
சகோதரர். ஜான்சன் நகோமி
சகோதரி.பிரிசில்லா ஆமோஸ்
சகோதரி.சரன்யா சத்தீஷ்
செல்வி.கிறிஸ்துராணி
ஆசீர்வாதம்
சகோ. ஈஸ்டர் ராஜ்

பிறந்த நாள் மற்றும் திருமண நாளை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் சபையோராக வாழ்த்துகிறோம்.

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி.திரு.R. ஜெகநாதன்–
முத்து லெட்சுமி
திருமதி.திரு. பீட்டர் ராமச்சந்திரன்–
தாரணி
திருமதி.திரு.A. ஆரோக்கியதாஸ்–
லில்லி ப்ளோரா
திரு.திருமதி. ராபின் ராஜ்–
ஹெலன் ஷீஜா

திருமதி.திரு. ஜெகன் –
தேவ கிருபை
திருமதி.திரு. அந்தோணி சாமி–
விஜயா
திருமதி.திரு. ராஜவேல் –
ஜகதாம்பாள்
திருமதி.திரு.M.கண்ணன் –
போத்தியம்மாள்
திருமதி.திரு.சுனில் –
அனிதா

# 2025 – பிப்ரவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/02/2025 | சகோ. பக்த ராஜ் | சகோ.ஸ்டாலின் |
| 09/02/2025 | சகோ. சாம் சுந்தர் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 16/02/2025 | சகோ. M. கிறிஸ்டோபர் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 23/02/2025 | சகோ. சுபின் சிங் | சகோ. பிரசாத் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/02/2025 | சகோ. பிராங்ளின் | சகோ.ஸ்டாலின் |
| 14/02/2025 | வாலிபர்கள் ஐக்கிய ஆராதனை | |
| 21/02/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 28/02/2025 | சகோ. ஏசுரெத்தினம் | சகோ. சாமுவேல் தாசையா |

## ஆராதனை ஒழுங்குகள்

**08/02/2025 அன்று முழு இரவு ஜெப ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**15/02/2025 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – யோவான்

**28/02/2025 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – பின்னர் அறிவிக்கப்படும்

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் (யூத் சென்டர்)
நேரம் – மாலை 4:00 முதல் 5:30 வரை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் (யூத் சென்டர்)
நேரம் – மாலை 7:00 முதல் 8:30 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2025–பிப்ரவரி மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. நேசர் எப்படி வருகிறார்.?
2. நேச வைராக்கியம் எதைப்போல கொடிதாயிருக்கிறது.?
3. தோப்புக்கு நீர்ப்பாய்ச்சுகிறதற்குக் எதை உண்டு பண்ணினேன்.?
4. யாரெல்லாம் என்றைக்கும் நினைவில் இருப்பதில்லை.?
5. ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது என்ன செய்யப்படும்..?
6. சாலொமோனுக்கு எங்கே திராட்சத்தோட்டம் உண்டாயிருந்தது.?
7. ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு என்ன.?
8. அநேக சொப்பனங்கள் எப்படி இருக்கிறது.?
9. நேசர் எங்கே போனார்? என்று சூலமித்தி குறிப்பிடுகிறாள்.?
10. சூலமித்தி பள்ளத்தாக்கிற்கு எதற்கு போனேன் என்று கூறினாள் .?
11. அறிவுபெருத்தவன் எப்படிபட்டவனாயிருக்கிறான்.?
12. மூடனின் நகைப்பு எப்படியிருக்கும்.?
13. சூலமித்தி யாரைத் தேடுகிறபோது அடித்து காயப்படுத்தினார்கள்.?
14. நேசருக்கு சூலமித்தி வாசல்களண்டையிலே எவைகளை வைத்திருக்கிறாள் .?
15. எப்படி பிரயாசப்படுகிறான் அப்படிப் பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு எதைச் சொந்தமாக விட்டுவிட வேண்டியதாகும்.?

விடைகளை வருகின்ற 20-02-2025 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன்
குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**“ பிரசங்கி ”**

**“ உன்னதப்பாட்டு ”**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

## 2025 - ஜனவரி மாத வேத வினாவுக்கு விடை

1. யோபு (யோபு 3:26)
2. யோபு (யோபு 30:15)
3. யோபு (யோபு 30:1)
4. பில்தாத் (யோபு 8:3)
5. புத்தியில்லாத மனுஷன் (யோபு 11:12)
6. யோபு (யோபு 7:20)
7. யோபு (யோபு 10:1)
8. யோபு (யோபு 6:2)
9. விபசாரகாரன் (யோபு 24:18)
10. யோபு (யோபு 31:1)
11. யோபு (யோபு 29:4)
12. யோபு (யோபு 16:6)
13. யோபு (யோபு 13:23)
14. பாதாளம் (யோபு 10:21)
15. எலிபாஸ் (யோபு 22:9)

## 2025- ஜனவரி மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. வனிதா
SIS. தயா ஏசுரத்தினம்
SIS. ஜீனா சதீஸ்குமார்
SIS. ஜோன்ஸி ராணி
SIS. மரியகுளோரி தாஸ்
SIS. பத்மினி வர்க்கீஸ்
SIS. விக்டோரியா ராஜன்
BRO. எபினேசர்

## 2. பண பலம் தேவையில்லை...

ஆதி–28:3,4,5 சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து நீ பல ஜனக்கூட்டமாகும்படி உன்னை பலுகவும் பெருகவும் பண்ணி தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்ததும் நீ பரதேசியாய் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததியாருக்கும் அருளுவேன் என்று சொல்லி ஈசாக்கு யாக்கோபை அனுப்பி விட்டான். இந்த இடத்திலே ஈசாக்கு யாக்கோபை அனுப்பி விட்டான் என்று வாசிக்கிறோம். செல்வ செழிப்பான குடும்பம் தன் மகன் யாக்கோபை ஈசாக்கு சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதிப்பார் என்று சொல்லி அனுப்பிவிடுகிறான். ஆதி–32:10– அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்திற்கும் நான் எவ்வளவேனும் பாத்திரனல்ல நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானை கடந்து போனேன். இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். கோலும் கையுமாக போன யாக்கோபை சர்வ வல்லமையுள்ள தேவன் ஆசீர்வதித்தார். இரு பரிவாரங்களையும் உடையவனாகி யாக்கோபு வந்தார். நம் கையில் பணம் இருந்தால்தான் தேவன் ஆசீர்வதிக்கமுடியும் என்றில்லை. பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நம்மை ஆசீர்வதிக்க தேவன் வல்லவராயிருக்கிறார். அவர் சர்வ வல்லமையுள்ள தேவன்.

## 3. ஆள்பலம் தேவையில்லை...

ஆதி–35:11 பின்னும் தேவன் அவனை நோக்கி நான் சர்வவல்லமையுள்ள தேவன் நீ பலுகிப் பெருகுவாயாக. ஒரு ஜாதியும் பற்பல ஜாதிகளின் கூட்டங்களும் உன்னிலிருந்து உண்டாகும் ராஜாக்களும் உன் சந்ததியில் பிறப்பார்கள். ஆதி–35:10 ரெபெக்காளின் தாதியாகிய தெபொராள் மரித்து, பெத்தேலுக்குச் சமீபமாயிருந்த ஒரு கர்வாலி மரத்தின் கீழ் அடக்கம் பண்ணப்பட்டாள். அதற்கு அல்லோன் பாகூத் என்னும்பேர் உண்டாயிற்று. யாக்கோபு கானான் தேசத்திற்குள் வருவதற்கு முன்பாகவே ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நினைத்து ஒரே ஜீவன் ரெபெக்காள். என் மேல் சாபம் வந்தாலும் பரவாயில்லை யாக்கோபுக்கு ஆசீர்வாதம் வரவேண்டும் என்று நினைத்து ஒரு தாயார் இப்போ யாக்கோபுடன் இல்லை. அவர்கள் மரித்துவிட்டார்கள் என்று பார்த்தாள் ரெபெக்காளின் தாதியாகிய தெபொராளும் மரித்து விட்டாள். யாக்கோபை சிறுவயதில் தூக்கி வளர்த்த தெபொராளும் மரித்து விட்டார்கள். இந்த சூழ்நிலையில் கானானில் யாக்கோபு ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று நினைக்க ஒரு ஆளும் இல்லை, அவர்களை அடக்கம் செய்து விட்டு அழுகிறார், அப்பதான் தேவன் யாக்கோபிடம் சொல்லுகிறார் யாக்கோபே நீ ஏன் அழுகிறாய் நான் சொல்லுகிறேன், நான் உன்னை ஆசீர்வதிப்பதற்கு நல்ல மனிதர்கள் இருக்க வேண்டும் என்று அவசியம் கிடையாது. நான் சர்வ வல்லமையுள்ள தேவன்

எந்த மனுஷனுடைய உதவியும் இல்லாமல் உன்னை ஆசீர்வதிக்க என்னால் முடியும் நான் சர்வ வல்லமையுள்ள தேவன்.

## 4. அரசாங்க உதவி தேவையில்லை...

ஆதி-43:14- அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களுடனே அனுப்பி விடும்படிக்கு சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமூகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப்பண்ணுவாராக.

சர்வாதிகாரி பார்வோன் ஆண்டுகொண்டிருக்கிற நாட்கள் அது. சிமியோன் சிறை வைக்கப்படுகிறான் பென்யமீனை கூட்டிக்கொண்டு போனால்தான் சிமியோனை விடுவேன் என்ற ஒரு நிபந்தனை பென்யமீனை கூட்டிக்கிட்டு போயிட்டு வந்து விடுகிறோம் என்று சொல்கிறார்களே, இவர்களும் எகிப்திற்கு போய் வருவார்கள் என்ற ஒரு நிச்சயம் இல்லை. அப்பதான் யாக்கோபு சொல்கிறார் ஆதி-43:14 சர்வ வல்லமையுள்ள தேவன் அவர் சமூகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக என்று. அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் அவரால் அரசாங்கத்திற்கு மேற்பட்ட வேலை செய்ய முடியும். நம்மை விடுதலை செய்ய அரசாங்கத்தின் உதவி தேவையில்லை. எதுவுமே இல்லாமல் அவருக்கு உதவி செய்ய முடியும். நான் சர்வ வல்லமையுள்ள தேவன்.

## 5. சட்டதிட்டங்கள் தேவையில்லை...

ஆதி-48:34 யாக்கோபு யோசேப்பை நோக்கி சர்வவல்லமையுள்ள தேவன் கானான் தேசத்திலுள்ள லூஸ் என்னும் இடத்தில் எனக்கு தரிசனமாகி என்னை ஆசீர்வதித்து நான் உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி உன்னைப் பல ஜனக்கூட்டமாகி உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தை நித்திய சுதந்தரமாகக் கொடுப்பேன் என்று என்னோடே சொன்னார். யோசேப்பு பிள்ளையாக இருந்தாலும் அவர் சொன்ன வார்த்தையை மாற்றாமல் அவரை தேசத்திற்கு அதிபதியாகி வைத்து ஆசீர்வதித்தார். சட்டதிட்டங்களை மாற்றி உன்னை ஆசீாவதிக்க அவரால் முடியும் சர்வ வல்லமையுள்ள தேவன்.

## A.ஆசீர்வாதங்களின் ஊற்றானவர்...

யாத்-6:3 சர்வவல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தரிசனமானேன். ஆனாலும் யெகோவா என்னும் என் நாமத்தினால் நான் அவர்களுக்கு அறியப்படவில்லை. நான் சர்வ வல்லமையுள்ள தேவன் மாத்திரமல்ல இன்னொரு நாமம் இருக்கிறது நான் கர்த்தர் யெகோவா. யேகோவா

எல்லாவற்றிற்கும் மூலகாரனமானவர். ஊற்றுகளின் ஊற்றானவர். யாத்-6:1 அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நான் பார்வோனுக்கு செய்வதை இப்பொழுது காண்பாய். பலத்த கையைக் கண்டு அவர்களைப் போக விட்டு பலத்த கையைக் கண்டு அவர்களைத் தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவான் என்றார். மேலும் தேவன் மோசேயை நோக்கி நான் யெகோவா மோசேயிடம் கர்த்தர் சொல்லுகிறார். மோசே அவர்களுக்கு தெரியாது, அவர்களுக்கு சர்வவல்லமையுள்ள நாமம் மட்டும் தெரியும். ஆனால் நான் கர்த்தர்.

எல்லாவற்றிற்கும் மூலக்காரனமானவராய் இருக்கிறேன். எல்லா ஆசீர்வாதங்களின் ஊற்று எனக்குள் இருக்கிறது. நான் இருக்கிறேன் என்ற நாமம் உடையவர்.

## B.வார்த்தையையே வைத்து ஆசீர்வதிக்க முடியும்...

எசேக்கி-10:3-5 அந்தப் புருஷன் உள்ளே பிரவேசிக்கையில் கேருபீன்கள் ஆலயத்தின் வலது புறத்தில் நின்றன. ஒரு மேகம் உட்பிரகாரத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை கேருபீனின் மேலிருந்து எழும்பி ஆலயத்தின் வாசற்படியிலே வந்தது. ஆலயம் மேகத்தினாலே நிறைந்திருந்தது. பிரகாரமும் கர்த்தருடைய மகிமையின் பிரகாசத்தினால் நிரம்பிற்று. கேருபீன்களுடைய செட்டைகளின் இரைச்சல் சர்வத்துக்கும் வல்ல தேவன் பேசுகையில் உண்டாகும் சத்தம்போல் வெளிப்பிரகார மட்டும் கேட்கப்பட்டது. சர்வவல்லமையுள்ள தேவன் பேசுகிற சத்தம். நான் வார்த்தையை பேசுகிறபோது வருகிற இந்த வாத்தையின் சத்தம் வைத்து உங்களை ஆசீர்வதித்து முடியும்.


இந்த வார்த்தையினாலே நம்மை ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார். வார்த்தையை அனுப்பி காரியத்தை செய்யமுடியும்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அன்பு சகோதரி

டெய்சி எபிநேசர்

# Kids Corner



# Bible Wordsearch

More puzzles at:
biblewordgames.com

Fit the words in the list into the diagram below reading forward, backward, up, down, diagonally, always in a straight line.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | A | R | P | R | O | P | H | E | T | S | Y | D | H |
| O | L | E | M | R | A | C | O | W | A | T | E | R | U | E |
| H | E | A | B | R | A | H | A | M | N | U | H | N | O | V |
| S | A | C | R | I | F | I | C | E | S | A | D | V | L | A |
| I | P | E | U | B | S | L | M | A | W | R | T | O | C | C |
| K | E | E | R | T | U | D | E | R | E | H | T | A | G | J |
| N | D | O | P | N | N | R | K | D | R | E | S | S | E | D |
| F | O | R | S | A | K | E | N | Y | E | O | U | Z | T | O |
| K | R | R | M | V | C | N | I | T | T | T | E | I | I | O |
| H | U | M | O | R | O | S | V | S | H | B | S | R | R | L |
| L | O | R | D | E | L | O | E | L | E | A | R | S | I | B |
| C | F | N | G | S | L | E | S | L | A | V | J | J | P | A |
| U | Y | E | N | R | U | O | J | C | D | A | O | I | S | H |
| G | I | N | I | O | B | A | D | I | A | H | B | R | L | A |
| M | O | C | K | E | D | G | T | R | E | N | C | H | G | E |

| | |
|---|---|
| ABRAHAM | HUNDRED |
| AHAB | ISAAC |
| BAAL | ISRAEL |
| BLOOD | JEZEBEL |
| BROOK | JOURNEY |
| BULLOCK | KINGDOM |
| BURNT | KISHON |
| CARMEL | KNIVES |
| CAVE | LEAPED |
| CHILDREN | LORD |
| CLOUD | MOCKED |
| CUT | OBADIAH |
| DRESSED | PROPHETS |
| ELIJAH | RAIN |
| ESCAPE | SACRIFICE |
| FORSAKEN | SERVANT |
| FOUR | SPIRIT |
| GATHERED | TRENCH |
| GROVES | WATER |

COMMANDMENTS
ANSWERETH

After you find all the hidden words the left over letters spell out a Bible verse reading from the top left to the bottom right

___ _____ ____ __ _____

_______ _________ Psalm 9

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில


















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்
Ph.66021072 – 96760452

செயலாளர் : சகோ.S.சுகுமார்
Ph.99837646

பொருளாளர் : சகோ.S.சிவ குமார்
Ph.97224276

பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்
Ph.65967170 – 99368775

வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.


Private Circulation only